**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 57/2018** **தேதி: 22.07.2026**

**வா.சா. 1 – வைரமணி**

**12 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

எனக்கு 57 வயதாகிறது. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. பள்ளிக்கூடம் செல்லவில்லை. எனது தந்தை எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 1 முதல் 5 பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த அண்ணன் லெக்கன் என்பவரின் வாரிசுகள் ஆவார்கள். 6 முதல் 9 பிரதிவாதிகள் எனது உடன் பிறந்தவர்கள். அவர்கள் என்னுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்ய முன்வராததால் தான் நான் அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். எத்தனை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 9 லக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்துக்கள் எல்லாம் எங்களது பூர்விக சொத்துக்கள். 14.06.1988 ம் வருடம் தாவா சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார் எனது குடும்பத்தில் உள்ள ஆண் வாரிசுகள் பதிவு பாக விஸ்தி செய்துகொண்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்னவாறு பாக பிரிவினை ஏற்கனவே ஏற்பட்டதால் தான் என்னுடன் சேர்ந்த ஆண் மற்றும் பெண் வாரிசுகள் வழக்கு தாக்கல் செய்ய முன் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது திருமணத்திற்கு முன்பே எனது அண்ணன் சொத்துக்களை பிரித்து நிலத்தினை உழ ஆரம்பித்துவிட்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.